# ஸூரா அல் பாத்திஹாவின் விளக்கம் – (தொடர் 06)

تفسير سورة الفاتحة

Moulavi M.M.Zaky B.A. (Hons)

### 4) அஸ்ஸப்உல் மஸானீ

இப்பெயர் குர்ஆனிலும், ஆதாரபூர்வமான ஹதீஸ் ஸஹாபாக்கள் மற்றும் தாபிஈன்களுடைய கூற்றுக்களிலும் இடம் பெற்றுள்ளது.

وَلَقَدْ آتَيْنَاكَ سَبْعًا مِّنَ الْمَثَانِي وَالْقُرْآنَ الْعَظِيمَ ﴿٨٧﴾

அல்லாஹ் கூறுகின்றான்:

(நபியே!) நிச்சயமாக நாம் திரும்பத் திரும்ப ஓதப்படும் வசனங்கள் ஏழையும், மகத்தான குர்ஆனையும் உமக்கு வழங்கினோம்.

(அல்- ஹிஜ்ர்:15:87)

இவ்வசனத்தில் திரும்பத் திரும்ப ஓதப்படும் 7 வசனங்கள் என்பது அல்பாத்திஹா எனும் அத்தியாயத்தைக் குறிப்பிடுகிறது என்பது பெரும்பான்மையான குர்ஆன் விரிவுரையாளர்களுடைய கருத்தாகும் இதே கருத்தையே இமாம் இப்னு கரீர் அத்தபரீ (ரஹ்) அவர்களும் ஆதரிக்கின்றார்கள்.

அவ்வாறே ஹஸ்ரத் உமர் (ரழி), அலி (ரழி), அபூஹுரைரா (ரழி), இப்னு அப்பாஸ் (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி) போன்ற நபிதோழர்களும், இமாம் ஹஸன் (ரஹ்), முஜாஹித் (ரஹ்), கதாதா (ரஹ்), அழல் ஆலியா (ரஹ்), ஸஈத் பின் ஜுபைர் (ரஹ்), ரபீஃ பின் அனஸ் (ரஹ்) போன்ற தாபிஈன்களும் இதே கருத்தைக் கொண்டுள்ளனர்.

### 1) ஹஸ்ரத் ஆபூ ஸஈத் பின் அல்முஅல்லா (ரழி) அவர்கள் கூறியதாவது:

நான் மஸ்ஜிதுந் நபவீ பள்ளிவாசலில் தொழுதுகொண்டிருந்தேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னை அழைத்தார்கள். அவர்களுக்கு நான் பதிலளிக்கவில்லை. (தொழுது முடிந்த பிறகு) அவர்களிடம் சென்றேன். அப்போது அவர்கள், “நான் அழைத்த போது நீங்கள் வராமல் இருந்ததற்குக் காரணம் என்ன?” என்று கேட்டார்கள். நான், “அல்லாஹ்வின் தூதரே! நான் தொழுதுகொண்டு இருந்தேன் (அதனால்தான் உடனடியாக நான் பதிலளிக்கவில்லை) என்று கூறினேன்.

(அதற்கு) நபி (ஸல்) அவர்கள், “அல்லாஹ் (இறை நம்பிக்கையாளர்களே!) அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் உங்களை அழைக்கும் போது அவர்களுக்குப் பதிலளியுங்கள் என (அல் அன்பால் :08:24) ஆவது வசனத்தில்) சொல்லவில்லையா? என்று கேட்டார்கள். பிறகு நீங்கள் பள்ளிவாசலிலிருந்து வெளியேறுவதற்கு முன்னால் குர்ஆனிலேயே மகத்துவமிக்க ஓர் அத்தியாயத்தை உங்களுக்கு நான் கற்றுத்தருகின்றேன்” என்று சொன்னார்கள்.

பிறகு எனது கையைப்பிடித்துக் கொண்டார்கள். பின்னர் பள்ளிவாசலிருந்து அவர்கள் வெளியேறமுற்பட்ட போது, “அல்லாஹ்வின் தூதரே! குர்ஆனிலேயே மகத்துவமிக்க ஓர் அத்தியாயத்தை எனக்குக் கற்றுத்தருவதாகக் கூறினீர்களே!” என்றேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “ஆம்” அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் (என்று தொடங்கும் அல்பாத்திஹா அத்தியாயம்) தான் அது. அது திரும்பத்திரும்ப ஓதப்படும் ஏழு வசனங்களைக் கொண்டதும், எனக்கு அருளப்பெற்ற மகத்துவம் பொருந்திய குர்ஆனும் ஆகும்” என்றார்கள்.

(நூல்: புகாரி: 4474, 4647, 4703, 5006)

நபி (ஸல்) அவர்கள் இதேபோன்று ஹஸ்ரத் உபைய்பின் கஃபு (ரழி) அவர்களுக்கும் பள்ளிவாசலில் வைத்து இதனைக் கற்றுக் கொடுத்தார்கள்.

(நூல்: பத்ஹுல்பாரி 8/157, அல்முவத்தா : 37)

- **அஸ்ஸபுஉல் மஸானீ என்றழைக்கப்பட்டதற்கான காரணம்:-**

இவ் அத்தியாயம் 7 வசனங்களைக் கொண்டு அமைந்திருப்பதும் இது தொழுகையில் திரும்பத்திரும்ப ஓதப்படுவதுமே இப்பெயர் கொண்டு அழைக்கபடக் காரணமாகும் என்பது பெரும்பான்மையான அறிஞர்களுடைய கருத்தாகும்.

இது தொடர்பாக இன்னும் 7 கருத்துக்கள் கூறப்பட்டாலும், அவை பலவீனமானவை என்ற காரணத்தினால் இங்கு நாம் அவற்றைக் குறிப்பிடவில்லை.